REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 19உ சனி (4—12—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 20உ ஞாயிறு (5—12—54) [இதழ் 149

## ஏ. கோவிந்தசாமியின் கண்டனம்

"புதுவையும், காரைக்காலும் ஒரு வருடத்திற்குள் சென்னை மாநிலத்துடன் இணைக்கப்பட வேண்டும்; புதுச்சேரி, தென்னாற்காடு மாவட்டத்தின் தலைநகராக வேண்டும்," என்று, தோழர் ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., சட்ட சபையில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

பிரெஞ்சு ஆதிபத்தியத்திடமிருந்து விடுதலை பெற்ற புதவை, காரைக்கால் பகுதிகள் கடந்த நவம்பர் மாதம் முதல் ஒரு இந்திய கமிஷனரின் நேரடி ஆட்சிக்கு உட்பட்டதாயிருப்பதுடன், அப்பகுதிகளைத் தனியாக ஒரு 'சி' பிரிவு மாநிலமாக ஆக்கி, மத்திய அரசாங்கத்திற்கு நேரடியாகக் கட்டுப்படுத்தும் முயற்சியும் டெல்லி வட்டாரங்களில் வேகமாக நடைபெற்று வருகிறது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது!

# ஒரே மொழி வழங்கும் பகுதிக்கு இரு மாநில ஏற்பாடுகளா?

## அதனால் முன்னேற்றம் தடைபடும்

### மொழி மாநில ஏற்பாடு: நிஜலிங்கப்பா கருத்து

"இரண்டு கர்நாடகம், இரண்டு ஆந்திரம், இரண்டு மகாராஷ்டிர மாநிலங்கள் வேண்டுமெனச் சிலர் கோருகிறார்கள்; அது நினைத்துக்கூட பார்க்க முடியாத கோரிக்கையாகும்,"

—என்று, கர்நாடக பிரதேச காங்கிரஸ் குழுத் தலைவர் எஸ். நிஜலிங்கப்பா பத்திரிகையாளரிடம் கூறியுள்ளார் எனத் தெரிகிறது.

அவர் மேலும், "நிர்வாக சவுகரியத்தைக் கண்ணுற்றாலுங்கூட, ஒரு மொழி பேசும் பிரதேசத்தில் இரண்டு மாநிலங்கள் வைத்துக் கொள்வது விரும்பத்தக்கதல்ல. குறிப்பாக, கர்நாடகத்தைப் பொறுத்த வரையில், மைசூர் உட்பட, மாநிலத்தின் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் அந்தக் கோரிக்கை பாதிக்கும்," என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மைசூர் அரசாங்கம், மைசூர் மாநிலத்திற்கு வெளியில் உள்ள கன்னடப் பகுதிகள் பற்றி ஆராய்ந்தறிய நியமித்த ஆய்வுக் குழு, தனது அறிக்கையில்,

"எவ்வளவு கவலையுடன் எல்லைகளை நிர்ணயித்தாலும் ஒருகுறிப்பிட்ட மொழி பேசுகிற மக்கள் சிறுபான்மையினராக விளங்குகிற பகுதிகளை இல்லாமற் செய்துவிட முடியாது. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மாறாக, மேலும் பல பிரச்சினைகளை உருவாக்குவதாகவே உள்ளது, ஊன்றிச் சொல்லப்படுகிற மொழிவழிக் கருத்துக்கள்.

"மைசூருக்கு வெளியிலிருக்கிற கன்னடப் பகுதிகளின் அளவு சுமார் 42,827 சதுர மைல்கள் இருக்கக்கூடும். அங்கு சுமார் 1,00,67,473 கன்னடியர்கள் வாழ்கிறார்கள்,"

என்று குறிப்பிட்டுள்ளது.

இவ்வறிக்கையைப் பற்றிக் குறிப்பிட்ட திரு நிஜலிங்கப்பா அவர்கள் கூறியதாவது:—

"இந்த ஆய்வுக் குழுவின் அறிக்கை என்னைப் பொறுத்த மட்டில் மகிழ்ச்சி தருவதாயில்லை. அறிக்கை யூகிக்கப்பட்ட விவரங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருப்பதாகவேதான் எண்ணுகிறேன். மாநிலங்களைத் திருத்தி அமைக்கும் எந்த யோசனையும்,

(4-ம் பக்கம் பார்க்க.)

## சட்டசபையில் ஏ. கோவிந்தசாமி

"அண்மையில் நடைபெற்ற மாவட்ட நாட்டாண்மைக் கழகத் தேர்தலில் கையாளப்பட்ட புதிய வாக்குப் பதிவு முறையினால் ஏராளமான வாக்குகள் செல்லாதவையாயின: காரணம், மக்களுக்குப் புதிய வாக்கு முறையைப் பற்றிப் புரிந்துகொள்ள முடியவில்லை; மேலும், காங்கிரசுக்கு எதிராக வாக்களித்தவர்கள் பழிவாங்கப் படுகின்றனர்,"

என்று தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., சட்டசபையில் இடித்துரைத்திருக்கிறார்.

# பக்தி நெறி - நம்பச் சொல்கிறது! பகுத்தறிவுநெறி-சிந்திக்கசொல்கிறது

## மார்ஷல் டிட்டோ சென்னை வருவார்

இந்தியாவுக்கு வருகை தரும் யூகோஸ்லேவியா குடியரசுத் தலைவரான மார்ஷல் டிட்டோ, சென்னைக்கும் வருவார் எனத் தெரிகிறது.

ஜனவரி இரண்டாம் வாரத்தில், பர்மாவிலிருந்து சென்னை திரும்பும் அவர், மைசூர் வழியாக வடநாடு செல்வார் என்றும் தெரிய வருகிறது.

## எது ஆகும் நெறி? எது ஆகா நெறி?

### தோழர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

"'ஆகும் நெறி எது? ஆகா நெறி எது?' என்பதற்கான விளக்கத்தை இந்த நாட்டில் பலர் கூறுகிறார்கள்—ஆண்டு முழுவதும்—365 நாட்களும்! நாட்டில் ஆண்டவர்கள் பலரைப் பற்றிய அருமை பெருமைகளை எடுத்துக் கூறி—'அவனை' அடைய வழி தேடுவதே, ஆகும் நெறி; அல்லாதது, ஆகா நெறி—என்ற உபதேசம் தொடர்ந்து நடைபெற்று வருகையில், நாம்—பகுத்தறிவு இயக்கத்தவராகிய நாம்—'ஆகும் நெறி எது? ஆகா நெறி எது?' என்ற விளக்கத்தைத் தருகிறோம்—என்றாவது ஒரு நாள்;

"'ஆண்டவனை அடையும் நெறி, பக்தி மார்க்கம்; பக்தி நெறி; அது தான் ஆகும் நெறி' என்று மதவாதிகள் கூறுகிறார்கள்!

"பகுத்தறிவு இயக்கத்தவராகிய நாம், ஆண்டவனை அடையும் அந்த நெறி—பக்தி நெறி, மக்களுக்கு வேண்டாதது; பகுத்தறிவுக்கு ஒவ்வாதது; மக்களுக்கு வாழ்வு தராதது; மக்களை மடமையிலாழ்த்துவது; எனவே, அது, 'ஆகாத நெறி'—என்று கூறுகிறோம்; 'பகுத்தறிவு நெறியே மக்களை வாழ்விக்கவல்லது; அறிவுக்கு ஒத்தது; தேவையானது,' என்றும் பறைசாற்றுகிறோம்;

"பக்தி நெறி, தனது கொள்கைகள், கோட்பாடுகள் அத்தனையையும் அப்படியே நம்பச் சொல்கிறது;

"பகுத்தறிவு நெறி, ஆராயச் சொல்கிறது; சிந்திக்கச் சொல்கிறது;

"பக்தி நெறி, 'எல்லாம் தெரியும்; தெரிய வேண்டியது எதுவுமே இல்லை,' என்கிறது;

"பகுத்தறிவு நெறி, 'எனக்கு இதுவரையிலும்தான் தெரியும்; இதுபற்றித் தெரியாது; ஆராய்ந்துகொண்டிருக்கிறேன்' என்று கூறுகிறது;

"பக்தி நெறி இனியும் வளராதது!

"பகுத்தறிவு நெறி வளர்ந்துகொண்டே செல்கிறது! அநாதி காலந்தொட்டு, அறிவு வளர்ச்சி பெற்று, படிப்படியாக வளர்ந்து வருகிறது, மனித சமுதாயம், என்று சொல்கிறது, பகுத்தறிவு நெறி!

"'உலகம் எப்போது உண்டாயிற்று? யாரால் உண்டாயிற்று? எப்போது ஒழியும்? எப்படி அழியும்?' என்று கேட்டால், 'எல்லாம் தெரியும்,' என்று கூறுவதுடன், முன்னுக்குப்பின் முரணான வாதங்களைச் சொல்கிறது, பக்தி நெறி!

"'உலகம் எப்படி உண்டாயிற்று?' என்ற கேள்விக்கு 'ஆராய்ந்துகொண்டிருக்கிறேன்; ஓரளவு ஆராய்ந்துள்ளேன்; அதில் கண்ட முடிவுகள் இதோ!' என்று கூறி, ஆராய்ச்சியிலீடுபட்டிருப்பது பகுத்தறிவு நெறி!"

—இவ்வாறு, தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை கோகலே மண்டபத்தில், தோழமைக் கழகத்தின் சார்பில், 3-12-54 மாலை நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், 'ஆகும் நெறி எது? ஆகா நெறி எது?' என்ற தலைப்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்னை தோழமைக் கழகத்தின் சார்பில், கோகலே மண்டபத்தில், 3—12—54 வெள்ளியன்று மாலை 6-15 மணிக்கு சிறப்புக் கூட்டமொன்று நடைபெற்றது. தோழர் முத்து அனைவரையும் வரவேற்றார். தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் தலைமை யேற்று, உரையாற்றினார்கள்.

ஏராளமான மக்கள்—பெண்கள் உட்பட, எட்டணா, நாலணா என நன்கொடை செலுத்தி வந்திருந்தனர்.

★

தோழர் நெடுஞ்செழியன் மேலும் பேசுகையில், பக்தி நெறி பரவ வேண்டும் என்று கூறும் பலரும், பல மதத்தவரும் ஆண்டவனுக்குக் கற்பித்துள்ள இலக்கணங்களை எடுத்துக் காட்டி, அந்த

(4-ம் பக்கம் பார்க்க)

## மதுரைச் சம்பவங்களுக்கு மதவெறியர்களே காரணம்

### சட்ட சபையில் ஏ. கோவிந்தசாமி இடித்துரை

### குழப்பம் பற்றி விசாரிக்க ரெவின்யூ அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்

*இருவர் கைது; பலர் மீது வழக்கு!*

மதுரையில் தோழர் எம். ஆர். இராதா அவர்களின் 'இராமாயண' நாடகத்தை எதிர்த்து, இந்துமகா சபையினரும், மகாலிங்க அய்யரும், மதுரை பிரபல காங்கிரஸ்காரர் வைத்தியநாத அய்யர் மகன் சங்கரன் என்ற வழக்கறிஞரும், இன்னும் சிலரும் தீவட்டி, அரிவாள், கத்தி முதலிய ஆயுதங்களுடன் ஆர்ப்பாட்டம் நடத்தி, போலீசார், சப்-மாஜிஸ்திரேட், பொதுமக்கள் பலர் மீதும் கல்லெறிந்து கலகம் விளைவித்து ஆர்ப்பாட்டம் விளைவித்ததை ஒட்டி, போலீசார் தடியடிப்பிரயோகம் செய்து நிலைமையைக் கட்டுப்படுத்தினர்.

இந்த குழப்பமான சூழ்நிலையைக் காட்டி நகர சப்-மாஜிஸ்திரேட், நகரெங்கும் 144 தடை உத்திரவு பிறப்பித்துள்ளார். நாடகமும் நகர எல்லைக்குள் நடத்தப்படக் கூடாதென அவர் தடை விதித்துள்ளார்.

இந்த நிலைபற்றி நேரில் கண்டறிய சென்னை போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ராஜரத்தினம் மதுரைக்கு விரைந்துள்ளார்.

சம்பவங்கள் பற்றி விசாரணை நடத்த சென்னை மாநில ரெவின்யூ போர்டு அங்கத்தினர் டபிள்யு ஆர். எஸ். சத்தியநாதன் என்ற ஐ. சி. எஸ். உயர்தர அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சென்னை சட்டசபையில், சர்க்காருக்கு, ரேடியோ மூலம் கிடைத்த செய்திகளை வைத்துக் கொண்டு, கனம் சுப்ரமணியம் அறிக்கை ஒன்று விடுத்திருக்கிறார்.

அவ்வறிக்கையில் அவர், "மதுரையில் தோழர் எம். ஆர். இராதாவினால் நடத்தப்படும் 'இராமாயண' நாடகத்தையொட்டி, குழப்பம் ஏற்பட்டது," என்று ஆரம்பித்து, நிலைமைகளை விளக்கி, காயம்பட்டவர்கள், விசாரணை பற்றிய குறிப்புகளையும் தந்திருக்கிறார்.

"தோழர் இராதாவின் நாடகத்தினால் அல்ல, குழப்பம்," என்பதைத் தெளிவாக்கும் வகையில், தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்கள், "இராதாவின் 'இராமாயணம்,' சென்னையிலும், மற்றும் பல நகரங்களிலும்

(4-ம் பக்கம் பார்க்க)

## கவர்னர்-காமராசர் சந்திப்பு மர்மம்?

சென்னை, டிச. 4—

சென்னை கவர்னர் பிரகாசா, நேற்று முதன் மந்திரி காமராசரைச் சந்தித்து, மதுரையில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினர் எனத் தெரிகிறது.

நிதி மந்திரி சுப்பிரமணியமும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டாராம்.

போலீஸ் இலாக்கா காரியதரிசி, போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆகியோரும் உடனிருந்தனராம்.

★

## இராதாவின் 'இராமாயண' நாடகம்: நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கருத்து

கடந்த நவம்பர் 19-ந் தேதியன்று கனம் சுப்பிரமணியம் அவர்கள், சென்னை ஒற்றைவாடை தியேட்டரில், நவாப் ராஜமாணிக்கம் குழுவினரின் 'குமார விஜயம்' எனும் 'பக்திரசம்' ததும்பும் நாடகத்துவக்க விழாவில் தலைமை

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 4—12—1954 சனி

# தலைவரா? உறுப்பினர்களா?

இந்தியை, இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சி மொழியாக ஆக்க வேண்டுமென அடம் பிடித்தவர்களும், இப்பொழுதும் பிடித்துக்கொண்டு இருப்பவர்களும், அம்மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருப்பவர்களேயாவர். நீண்ட காலமாகவே காங்கிரஸ் மேலிடத்தைச் சேர்ந்தவர்களில் பலர், அம்மொழிவழி வந்தவர்களாகவே இருந்த காரணத்தினால், அம்மேலிடமும் அதற்கு ஒப்பியது. தென்னாட்டு பார்ப்பனக் குடிமக்களும், வடமொழியின் வாரிசாக இந்தி இருக்கின்ற காரணத்தினால், முதலில் இந்தி நுழைக்கப்பட்டு விட்டால், பின்னர் மெள்ள மீண்டும் சமஸ்கிருதத்திற்கு ஏற்றம் ஏற்பட்டுவிடும் என்ற நப்பாசையில், இந்தியை ஆட்சி மொழியாக்குவதில் ஊக்கம் காட்டினர்—காட்டியும் வருகின்றனர். இந்திய அரசியல் சட்டத்திலும், சட்டம் நடைமுறைக்கு வந்ததுமுதல், பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, அதனிடத்தில் இந்தி இடம் பெற்றுக வேண்டும் என்ற விதியும் நுழைக்கப்பட்டு இருக்கிறது. அரசியல் ஆக்கமன்றத்தில் இது பற்றிய விவாதம் எழுந்தபோது, பொதுவாகத் தென்னாட்டு உறுப்பினர்கள்—குறிப்பாகத் தமிழ் உறுப்பினர்கள், அரசியல் சட்டத்தில் இந்த விதி நுழைக்கப்படுவதை எதிர்த்துப் பேசியும் உள்ளனர். அதுகண்டு ஆத்திரங்கொண்ட உத்திரப் பிரதேச இந்தி வெறியர் ஒருவர், அம்மன்றத்தில் ஆவேசம் வந்தவர்போல் பேயாடியும் இருக்கிறார். ஆடு மேய்ப்பவன் ஆட்டை ஓட்டிச் செல்வது போல், அந்த மொழி வெறியரை, அவருடைய இடத்திற்கு மற்றொருவர் ஓட்டிச் சென்று உட்காரவைத்ததாகவும், அப்பொழுது செய்தி தரப்பட்டது.

இந்தியத் துணைக் கண்டத்தில், கட்டாய இந்தி மொழியை எதிர்த்து, தாய் மொழியின் காப்புக்காக முதன் முதலாக அறப்போர் நடத்திய பெருமையும், ஆயிரக்கணக்கில் சிறைபுகுந்த சிறப்பும், காங்கிரஸ் ஆளவந்தார்களின் அடக்குமுறைக்குப் பலியாகி இரு இளைஞர்கள் உயிர்துறந்த அரும்பெரும் செயலும், தமிழ் இனத்திற்கே உரிமையுடையதாகும். இருந்தாலும், இந்திக்கு முதன்முதலாக வங்காளத்திலேயே எதிர்ப்பு ஏற்பட்டது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இந்திக்கு தமிழ் நாட்டில் மட்டுமல்ல, வங்காளத்திலும் எதிர்ப்பு இருந்தது-இருக்கிறது என்பதை வலியுறுத்துவதற்கே இதனை நாம் குறிப்பிடுகிறோம். உத்திர பிரதேசத்திலேயே, உருதுக்கும், இந்திக்கும் இன்னும் பிணக்கு இருந்துவருகிறது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

இந்திய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்த பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, ஆட்சி மொழியாக இந்தி இடம் பெற்றிருந்தபோதிலும், அந்த கால அளவுக்குள்ளாக அம்மொழி, ஆங்கிலத்தைப் போன்ற ஒரு வளமுள்ள மொழியாக ஆக முடியாது என்பது திட்டவட்டமான முடிவாகும். ஆட்சி மொழி பற்றிய காலவரையறையை மேலும் சில ஆண்டுகளுக்கு நீடிக்கலாமா என்ற கருத்து பண்டிதரின் மூளையைக் குடையத் தொடங்கி நீண்ட நாட்கள் ஆகின்றன.

ஆட்சி மொழி பற்றிய அரசியல் சட்டத்தின் எழுத்துக்கும். உணர்வுக்கும் எதிராக, பிற மொழியினரிடை எதிர்ப்பு வளர்ந்து வருகிறது என்பதும் மறைக்கக்கூடியதன்று. கட்டாய இந்திக்குக் குஜராத்திலும், சௌராட்டிரத்திலும் எதிர்ப்பு இருந்து வருகிறது; பம்பாயிலும் எதிர்ப்பு தென்படுகிறது. பஞ்சாப் மொழியினரிடத்திலும் எதிர்ப்பு இருக்கிறது. தமிழ் நாட்டின் எதிர்ப்புணர்ச்சி காட்டுத் தியாகப் பரிணமித்திருக்கிறது. நிற்க,

வட நாட்டிலும் சரி, திராவிடத்திலும் சரி, இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டிருப்பவர் நீங்கலாக உள்ள மற்ற மொழியினர் அனைவரிடத்தும், சிலரிடத்து வெளிப்படையாகவும், வேறு சிலரிடத்து மறைமுகமாகவும், இந்தி இடத்தில் எதிர்ப்பு இருந்து வருகிறது. அவ்வெதிர்ப்பை, இந்தி மொழியைப் பிற மொழியினர் மீது திணிக்க இந்தி வெறியர்கள் மேற்கொள்ளும் சொல்லும் செயலும், குறைப்பதற்குப் பதிலாக, கூட்டுவதற்கே பயன்படுகிறது. இப்போக்கினாலும், அம்மொழியை இதுவரை வெறுக்காத பிற மொழியினர் கூட, அதை வெறுக்க முந்துகின்றனர். இவ்வபாயத்தைக் குறித்துப் பண்டிதர் அடிக்கடி இந்தி வெறியர்களை எச்சரித்து வருகிறார்.

அரசியல் சட்டம் செயல்படுத்தப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் பத்து ஆண்டுகள் இருக்கின்றன, இந்தி, ஆட்சி மொழி உரிமையைப் பெறுவதற்கு. இப்பத்தாண்டுகள்வரை, அதே அரசியல் சட்டம், ஆங்கிலத்தைத்தான் ஆட்சி மொழியென ஒப்புக்கொண்டு இருக்கிறது. எனவே, மக்கள் சபையிலோ, மாநில சட்ட சபைகளிலோ, ஆங்கில மொழியில் பேசுவதும், தாங்கள் கேட்கும் கேள்விகளுக்கு அரசாங்கச் சார்பினரை ஆங்கில மொழியில் பதிலிறுக்க வேண்டுமென வற்புறுத்துவதோ, அரசியல் சட்ட எழுத்துக்கும் உணர்வுக்கும் ஒருக்காலும் புறம்பானதாக ஆகாது. அரசியல் சட்டத்தின்பால் பற்றுடையவர்களாக இருப்போம் என, உறுப்பினர்கள் துவக்கத்தில் எடுத்துக்கொண்ட வாக்குறுதிக்கும், விளங்க வைக்கவும், விளக்கம் பெறவும் ஆங்கில மொழியை உறுப்பினர்கள் மேற்கொள்வதற்கும் துளியும் முரண்பாடு இல்லை; அரசியல் சட்டத்துடன் ஒத்து இருப்பதேயாகும். இந்த அரசியல் சட்ட விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, மொழி பற்றி மக்கள் சபையில் எழுந்தப் பிரச்சினையையும், அதற்கு சபைத் தலைவர் மாவ்லங்கர் கூறிய கருத்தையும் ஆராய்வோம்.

தொழிலாளர் துறை துணை மந்திரியாக இருக்கிற தோழர் அபித் அலி பம்பாயைச் சேர்ந்தவராவார். அவருக்கு இந்தி தாய்மொழியன்று. உறுப்பினர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு அத் துணை அமைச்சர் தட்டுத் தடுமாறி, இந்தியில் பதில் கூறினார். ஆங்கிலச் சொற்களுக்குச் சரியான இந்திச் சொற்களைத் தேடிப் பிடித்து, இந்தியில் பதில் தருவதில் அவர் திணறினார். அது கண்டு, உறுப்பினர் பலர் வாய் விட்டுச் சிரித்துவிட்டனர். இக்காட்சியைக் கண்ட சபைத் தலைவர் மாவ்லங்கர் அவர்களுக்கு ஆத்திரம் பொங்கி விட்டது.

அதே நேரத்தில், உறுப்பினர் ஒருவர், அமைச்சரின் இந்தி மொழி விடையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூற தலைவரை வேண்டிக் கொண்டார். உறுப்பினர் வேண்டுகோளை நிறைவேற்றியிருக்க வேண்டும் தலைவர்; ஆனால், அவரோ, அரசியல் சட்டத்தைத் துணைக் கழைத்து, இந்தி மொழியில் கூறிய விடையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூற இனி அனுமதிக்க முடியாது எனக் கூறிவிட்டார். இந்தியையும் ஆங்கிலத்தையும் இரண்டறக் கலந்து அமைச்சர்கள் பேசினாலும், அவர்கள் கூற்றை விளங்கிக் கொண்டதாக உறுப்பினர்கள் வாய்மூடிக் கிடக்க வேண்டுமெனவும், அந்த ஆங்கில — இந்தியை உணர்ந்து கொள்ள முடியாமல் இருப்பது உறுப்பினர்களின் குற்றமெனவும், தலைவர் விளக்க உரை பகன்றார்.

அமைச்சரின் இந்திப் பேச்சை ஆங்கிலத்தில் அளிக்குமாறு கேட்பது வெறும் வசதியைக் குறித்த ஒன்றேயாகும்; எனவே மற்றவர்கள் விளங்கிக் கொள்வதற்காக, அதை ஆங்கிலத்தில் கூற ஏற்பாடு செய்ய வேண்டும் என, தமிழ் நாட்டு காங்கிரஸ் உறுப்பினர் அவிநாசிலிங்கம் அவர்கள் கேட்டார்.

அதற்கும், தலைவர், ஆண்டுக் கணக்கில் அவ்வசதியைச் செய்து கொடுத்து வந்தேன். இந்தி வளர்ச்சிக்கு வழிசெய்ய வேண்டியதாக இருக்கிறது. தங்களுக்கு இந்தி தெரியாது என்று காரணம் கூறி, ஆங்கிலத்தில் கூற வேண்டுமெனும் உறுப்பினர்கள் கோரிக்கைக்கு, இனி தாம் இணங்கப் போவதில்லை என்றும், மக்கள் சபை செயலாளரிடம் அதற்கான மொழிபெயர்ப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், தலைவர் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

தலைவரின் பிடிவாதம் இந்தி மொழி வளர்ச்சியைக் கூட்டுமா குறைக்குமா என்பதை பிறகு ஆராய்வோம். முதற்கண், அவர் பிடிவாதம் அரசியல் சட்ட எழுத்துக்கும் உணர்வுக்கும் ஒத்திருக்கிறதா என்பதை ஆராய்வோம்.

அரசியல் சட்டத்தின்படி, இன்று, ஆங்கிலந்தான் இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாக இருந்து வருகிறது. இன்னும் பத்து ஆண்டுகள் வரை அந்த அந்தஸ்து, அம்மொழிக்கு உண்டு. இதை மதித்து நடக்க வேண்டிய கடமையும் பொறுப்பும், மக்கள் சபை உறுப்பினர்களுக்கு இருப்பது போன்றே, அதன் தலைவருக்கும் இருக்கிறது. அரசியல் சட்டத்தினிடத்தில் பற்றுதலுடையவனாக இருப்பேன் என்றுநான், மற்ற உறுப்பினர்களைப் போலவே, தலைவரும் வாக்குறுதி எடுத்துக்கொண்டுள்ளார். வாக்குறுதி எடுத்துக் கொண்டபடி, தலைவரானாலும் கட்டுப்பட்டுத்தான் நடந்தாக வேண்டும். அதுதான் முறை - நியாயம்.

ஆனால் தலைவரோ, கொடுத்த வாக்குறுதியை மீறுகிறார்! அரசியல் சட்ட விதியை அலட்சியப்படுத்துகிறார்!

அரசியல் சட்டத்தின் எழுத்துக்கும் உணர்வுக்கும் கட்டுப்பட்டுத்தான், அமைச்சர் இந்தியில் இறுத்த விடையை, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கூற வேண்டுமெனக் கோரினர். ஆங்கிலம், இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாக உள்ளவரை, அம்மொழியை மேற்கொள்ள உறுப்பினர்கள் முனைவது, சட்டவிதிக்கு மாறுபட்டதும் அல்ல—முரண்பட்டதும் அல்ல. உறுப்பினர்கள் ஆங்கில மொழி பெயர்ப்புக் கோரிக்கை சட்டவரம்புக்குக் கட்டுப்பட்டதேயாகும். சட்டத்தின்பால் பற்றுக்கொண்டு நடப்பதாக உறுப்பினர்கள் கொடுத்த வாக்குறுதி மீறலும், அவர்கள் கோரிக்கையில் கிடையாது.

ஆனால், சட்டத்திற்குட்பட்ட உறுப்பினர்கள் கோரிக்கையை, மக்கள் சபைத் தலைவர், அரசியல் சட்டத்தை அவமதிப்பது எனக் குறைகூறுகிறார். மக்கள் சபையில் ஆங்கிலம் தேவை என உறுப்பினர்கள் இனி கோரினால், அக்கோரிக்கையை அனுமதிக்கப் போவதில்லை எனவும், தலைவர், பிடிவாதம் பேசுகிறார்!

சட்டத்தை மீறுவது எவர்? தலைவரா? உறுப்பினர்களா? பதில் கூறுங்கள்!

# தாழ்த்தப்பட்டோருக்கு தனி காலனி

**ரூ. 1 லட்சம் செலவில் சூரத் நகரசபை கட்டுகிறது**

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனி காலனி ஒன்றைக் கட்டித்தர ரூ. 1,10,000 செலவிடுவதென்று சூரத் நகரசபை தீர்மானித்திருக்கிறதாம்.

44,200 சதுர கெஜம் அளவுள்ள பிரதேசத்தில் 75 குடும்பங்கள் வசிக்கும் பொருட்டு போதிய வீடுகள் கட்டப்படும் என்று தெரிகிறது.

இப்போது சேரிகளில் உள்ள அஸ்திவாரங்களை அழித்துவிட்டு புதிய அஸ்திவாரம் கட்டப்படும் என்றும் தெரிகிறது.

மழை நீரும், சாக்கடை நீரும் வெளியேறும்படி அடித்தளத்தின் மட்டம் உயர்த்தப்படும் என்று தெரிகிறது.

சேரிகளைத் தூய்மையாக்கும் தனது திட்டத்திற்கு மானியம் தருமாறு சூரத் நகரசபை பம்பாய் சர்க்காரைக் கேட்கும் என்று தெரிகிறது.

## பாக். பிரதமர் முகமது அலி வேண்டுகோள்

தன்னுடைய ஏழாண்டு கால வாழ்வில் பாகிஸ்தானுக்கு தனியானதோர் தேசியப் பாட்டு ஒன்று எழுதப்படவில்லை என்று பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி கூறியுள்ளார்.

பாகிஸ்தான் மக்கள் அனைவராலும் புரிந்துகொள்ள இயலும்படி சிறந்த தேசியப் பாட்டு ஒன்றை எழுதுமாறு கவிஞர்களை முகமது அலி கேட்டுக்கொண்டார்.

# காலரா தடுப்பு ஊசி

**போட்டுக்கொள்ளுமாறு நிர்ப்பந்திக்க முடியாது!**

நாகை வழக்கில் தீர்ப்பு

நாகை, டிச. 2—

"காலரா தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளுமாறு யாரையும் நிர்ப்பந்திக்க நகரசபைக்கு அதிகாரங்கள்: கிடையாது," என்று, நகர சப்-மாஜிஸ்திரேட், வழக்கொன்றில் தீர்ப்பு வழங்கியிருக்கிறார் எனத் தெரிகிறது.

ஒரு ஹோமியோபதி டாக்டர் மீது இந்நகர் நகரசபையினர் காலரா ஊசி போட்டுக் கொள்ள மறுத்ததாக வழக்குத் தொடர்ந்தனர்.

தாம் மருந்து குடிக்கத் தயாராக இருப்பதாகவும், ஆனால் தம் உடம்பில் ஊசி குத்த அனுமதிக்க முடியாதெனவும் குற்றஞ் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் கூறினார் எனத் தெரிகிறது.

நீதிபதியும் அவரது உரிமையை ஏற்றுக்கொண்டார்களாம்.

# உரிமையில் தகராறு!

பாரசீகத்திலுள்ள பஹ்ரென் விமான நிலையத்தை பாரசீக அரசாங்கத்தின் அனுமதியின்றி உபயோகிக்கக் கூடாது என்று பாரசீகம் அறிவித்த 'தடை' பற்றி பிரிட்டன் கவலைப்படாது என்று கூறப்படுகிறது.

பாரசீக வளைகுடாவில் உள்ள பஹ்ரன் விமான நிலையம், பிரிட்டிஷ் விமானக் கம்பெனிகளுக்குப் பெரும் உபயோகமானதுமின்றி மிக முக்கியமானதொரு விமான நிலையமாகவும் இருந்து வருகிறதாம்.

பாரசீக வளைகுடாவிலுள்ள அந்த விமான நிலையத்திற்குப் பாத்தியதை கொண்டாட உரிமை இருப்பதாக பிரிட்டனோ அன்றி வேறெந்த நாடோ அங்கீகரிக்கவில்லை என்று சொல்லப்படுகிறது.

"கடந்த 200 ஆண்டு காலமாக பஹ்ரென்மீது எவ்விதப் பிடிப்பையும் பாரசீகம்கொண்டிருக்கவில்லை; எனவே, வெளிநாட்டு விமானங்கள் அங்கு இறங்குவதற்குப் பாரசீகத்தின் அதிகாரம் வேண்டுமென்று தடை விதிக்க அதற்கு உரிமை இல்லை," என்று பிரிட்டிஷ் வட்டாரங்கள் கூறுகின்றன.

## திரு. கோபால கவுண்டர்

திராவிட சட்டசபைக் கட்சியில் சேர்ந்தார்!

சென்னை, டிச. 2—

தமிழ் நாடு உழவர் கட்சியின் தலைவரான வி. கோபாலகவுண்டர், சென்னை சட்டசபை திராவிட பார்லிமெண்டரி கட்சியில் சேர்ந்துள்ளார் என்று தெரிகிறது.

# 26 முட்டையா?

திருநெல்வேலி சர்க்கார் கால்நடை மருத்துவ விடுதியில் ஒரு கோழி ஒரு மாதத்தில் 26 முட்டைகள் இட்டதாகத் தெரிகிறது.

சாதாரணமாக ஒரு கோழி ஒரு மாதத்தில் 15-லிருந்து 20 முட்டைகளிடும் எனலாம்.

## விஞ்ஞானம் வளருகிறது!

கால நிலையையும், மேகக் கூட்டங்களையும், மலைப் பிரதேசங்களையும் அறிந்து எச்சரிக்கையடைய, விமானங்களில் பொருத்தக்கூடிய 'ரடார்' சாதனம் தயாராகியுள்ளது. ஐம்பது மைல் தொலைவு வரையிலுள்ளவற்றை எடுத்துக் காட்டக் கூடிய 'ரடார்' திரை, விமான ஓட்டியின் அறையில் பொருத்தப்படும். தரைப் பகுதியை ஆராயவும் இந்தச் சாதனத்தை, சிறு மாற்றம் செய்து பயன்படுத்திக்கொள்ள முடியும்.

# ஜெர்மன் ஆயுதங்கள் பற்றிய கூற்றுக்கு மறுப்பு

## நா காவாது நவின்றதற்கு வருந்துகிருர் சர்ச்சில்

லண்டன், டிச. 1—

பிரிட்டிஷ் பிரதமரான சர். வின்ஸ்டன் சர்ச்சில் கடந்த வாரத்தில் தமது தொகுதியில் பேசிய கூட்டமொன்றில், "கடந்த உலக யுத்தத்தின் இறுதிக் கட்டமான 1945-ல், நாஜி ஜெர்மனியிடமிருந்து கைப்பற்றப்படும் ஆயுதங்களை பத்திரப்படுத்தி வைக்கவும்; ரஷியா, யுத்த முடிவில் தனது 'ஆக்கிரமிப்பை' விரிவாக்குமாளுல், ரஷ்யர்களை எதிர்க்க அந்த ஆயுதங்களை நாஜி ஜெர்மானியரிடமே தரவேண்டியிருக்கும் என்று மார்ஷல் மாண்ட்கோமரிக்கு தந்தி அனுப்பியிருந்தேன்," என்று கூறியிருந்தாரல்லவா?

இப்போது, "தாம் அப்படியொரு தந்தியை அனுப்பவில்லை போலிருக்கிறது," என்று பிரிட்டிஷ் மக்கள்சபையில் கூறியிருக்கிருர்.

"சர்க்கார் தஸ்தாவேஜுகள் பூராவும் தேடியதாகவும், இன்னும் தேடிக் கொண்டிருப்பதாகவும், தந்தி பற்றிய ஆதாரம் கிடைத்தபாடில்லை," யெனவும் அவர் குறிப்பிட்டார்.

"வுட்போர்டில் பேசுகையில், இம் மாதிரித் தந்தியை மாண்ட்கோமரிக்கு அனுப்பியதாக இரண்டாம் உலக யுத்தம் பற்றி நான் எழுதியுள்ள சரித்திரத்தில், 6-ம் பாகத்தில், பிரசுரித்திருப்போமென்ற ஞாபகத்தில் பேசிவிட்டேன்; ஆனுல், அச் சரித்திரத்தில் பிரஸ்தாப தந்தி வெளியிடப்படவில்லை.

"உதாரணமோ, மேற்கோளோ காட்டுமுன், அது சரிதானுவென்று பார்த்துக் கொண்டு சொல்ல வேண்டுமென நான் பிறருக்கு உபதேசிப்பதுண்டு; வுட்போர்டில் பேசுகையில் என் சட்டத்தை நானே மீறியது பற்றி வருந்துகிறேன்; அன்று, நான், எனது வாதத்திற்குப் புறம்பான இக்குறிப்பிட்ட வாக்கியத்தை நான் சொல்லியே இருக்க வேண்டியதில்லை.

"சரித்திர சம்பவங்களை அதற்குப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் வெளியிடுவதுதான் சிறந்தது என்ற கருத்துடன், 'மாஞ்செஸ்டர் கார்டியன்' என்ற இதழ் எழுதியுள்ள உண்மையை நான் இனி மறவேன். சென்ற வாரத்தில் நான் பேசியது குறித்து, சபையில் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்."

என்று, சர்ச்சில் கூறியிருக்கிருர்.

அவரது புட்போர்ட் பிரசங்கம் குறித்து நாடு பொங்கியெழுந்ததை ஒட்டி, மக்கள் சபையில், தொழிற் கட்சி அங்கத்தினர்கள் இப்பிரச்சினையை எழுப்பினர்.

[சர்ச்சில், உலகத்தில் உள்ள சிறந்த பேச்சாளர் வரிசையில் இடம் பெற்றிருப்பவர் என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.]

### பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினருக்கு சிறை

மோசடி செய்தாராம்

பிரிட்டிஷ் பாராளுமன்ற கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினரான காப்டன் பீடர் பேக்கர் என்பவர் மீது, பொய்க் கையெழுத்திடல், மோசடி செய்தல் ஆகிய ஏழு குற்றங்களுக்காக தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு ஏழாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இவர் ஆறு குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டு ஏழாவது குற்றச்சாட்டை மறுத்தார் என்று தெரிகிறது.

பாங்கிகளுக்கு வாக்குறுதிகள் அளித்ததின் மூலம் அவர் சுமார் 11 லட்ச ரூபாய் பெறுமான பிரச்சினைகளில் தவறி நடந்தார் என்று சொல்லப்பட்டது.

தான் மீண்டும் பாராளுமன்றத் தேர்தலுக்குப் போட்டியிடப் போவது இல்லை என்று அவர் நீதி மன்றத்தில் கூறினுர்.

### பிரமிக்கத் தக்கதுதான்!

நடைமுதல் ஆண்டில், பிரிட்டனில், விவசாயக் கருவிகள்—இயந்திரங்கள் உற்பத்தியும், ஏற்றுமதியும் பிரமிக்கத்தக்க அளவில் பெருகியிருக்கிறது. சராசரி 10,00,00,000 பவுன்கள் மதிப்புள்ள விவசாயக் கருவிகளையும்—இயந்திரங்களையும் பிரிட்டிஷ் தொழிற்சாலைகள் தயாரிக்கின்றன.

## கர்நாடக தி. மு. கழக முதல் மாநாடு

"இத்திங்கள் 18, 19-ந் தேதிகளில், பெங்களூரில் நடைபெறவிருக்கும் கர்நாடக தி. மு. கழக முதல் சமுதாய சீர்திருத்த, அரசியல் மாநாடுகளுக்கான பந்தல் அலங்காரத்துக்கு வேண்டிய ஓவியங்கள் முதலியனவற்றைத் தோழர்கள் எம். கிருஷ்ணன், மன்னர், கதிரவன் ஆகியோர் தயாரித்து வருகின்றனர்,"

என்று, மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் எஸ். ஜே உசேன் அறிவிக்கிருர்.

## பள்ளி ஆசிரியர்கள்

கவர்னர் உரை மீது நடைபெற்ற விவாதத்தில் மேல் சபையில் பேசிய திரு. பரமேஸ்வரன், புதியதாக துவக்கும் ஆரம்பப் பள்ளிகளில், பயிற்சி பெருத ஆசிரியர்களை நியமிப்பதற்கு கண்டனம் தெரிவித்தார். அவர் கூறியசாவது:—

"அப்படி நியமிப்பது நல்லதல்ல; பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நிரம்ப உள்ள பள்ளிகளிலிருந்து புதுப்பள்ளி நிர்வாகப் பொறுப்பை ஏற்பதற்கான ஆசிரியர்களைப் பொறுக்க வேண்டும்; பயிற்சி பெருத ஆசிரியர்களை, பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்களுள்ள பள்ளிகளில் பணியாற்றச் செய்ய வேண்டும்.

மேலும், செகண்டரி பள்ளி ஆசிரியர்களின் சம்பளம், பஞ்சப்படி, வீட்டு வாடகை இவற்றை உடனடியாக ஒரளவேனும் உயர்த்தவேண்டும்."

இந்தியாவிலிருந்து மிளகு ஏற்றுமதி அளவு 1951-52ல் 1,130 டன்னுக இருந்தது 1952-53ல் 1,507 டன்னுகவும், 1953-54ல் 2,234 டன்னுகவும் அதிகரித்துள்ளது.

# 'கிழக்கு ஐரோப்பிய பாதுகாப்பிற்கு கூட்டு இராணுவ ஒப்பந்தம்'

## மாஸ்கோ மாநாட்டு முடிவு!

மாஸ்கோ, டிச. 2—

மேற்கத்திய நாடுகள், பாரிஸ் ஒப்பந்தத்தை உறுதி செய்யுமாளுல் உடனடியாக, ஒரே இராணுவத் தலைமையின் கீழ், தற்காப்புப்படை அணி வகுப்பு ஒன்று திரட்டுவதற்கான கூட்டுப் பிரகடனத்தை, மாஸ்கோவில் கூடிய ரஷ்யா, மற்றும் கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்டு நாடுகளும் அங்கீகரித்துள்ளன என்று தெரிகிறது.

மாநாட்டில் ரஷ்யா நீங்கிய 7 கம்யூனிஸ்டு நாடுகள் பங்கு கொண்டன; சீனு, பார்வையாளராக மாநாட்டில் கலந்து கொண்டது

செக்கோஸ்லாவேக்கிய பிரதம மந்திரி வில்லியம் சிரோகி, 'இந்த மாஸ்கோ மாநாடு எடுக்கும் முடிவு, உலகில் மீண்டும் புதியதொரு யுத்தத்தைத் துவக்குவதற்கான எல்லா முயற்சிகளையும் தகர்த்தெறியும் ஆயுதமாகும்; சமாதானத்தைப் பாதுகாக்கும் சாதனமாகும்,' என்று கூறியிருக்கிருர்.

மாஸ்கோவில் செஞ்சீனத் தூதுவராயிருக்கும் சாங்-வென்-தீன், 'ஜெர்மன் பிரச்சினைக்கு நியாய மானவகையில் பரிகாரம் காண இன்னமும் கூட இடமிருக்கிறது,' என்று குறிப்பிட்டார்.

## கேளிக்கையிலும் லட்சியம் வேண்டும்!

"எந்தவிதமான கேளிக்கையாயிருந்தாலும், அது ஒரு லட்சியத்துடன் கூடியதாயிருக்க வேண்டும்; மக்களுக்கு நல்ல கருத்துக்களையும், நீதிகளையும் போதிப்பவையாக, கேளிக்கைகள் அமையவேண்டும்,"

என்று, மயிலை ஆர்ச் பிஷப், சென்னை புதுப்பேட்டையில் சென்ற வாரம் நடைபெற்ற கிறித்துவ விழாவொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

நிலக்கடலை சாகுபடி பற்றிய 1954–55-ம் ஆண்டிற்கான அகில இந்திய இரண்டாவது மதிப்பீட்டின்படி, நடப்பு ஆண்டில் மொத்தம் சுமார் 1,03,33,000 ஏகரா விஸ்தீரணத்தில் நிலக்கடலை பயிர் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

# பரிபூரணமாகக் காங்கிரசுடன் ஐக்கியமாகிவிட்டார்களாம்!

சென்னை, டிச. 2—

தமிழ் நாடு உழைப்பாளர் கட்சி ('கன'மாகியுள்ள ராமசாமி படையாச்சியாரின் தலைமையிலுள்ளது) யும், காமன்வீல் ('கனம்' மாணிக்கவேலர்) கட்சி சட்ட சபை உறுப்பினர்களும், 'பரிபூரணமாக'க் காங்கிரசுடன் ஐக்கியமாகிவிட முடிவு செய்துள்ளனர் என்ற தகவலை சட்ட சபைக் காங்கிரஸ் கட்சி செயலாளர் ராமகிருஷ்ணய்யர் வெளியிட்டுள்ளார்.

அந்த இரு கட்சி அங்கத்தினர்களும், நாளையோ, மறுதினமோ, காங்கிரஸ் உறுதிமொழிப் பத்திரத்தில் கையொப்பமிடுவார்கள் என்றும் அவர் கூறியிருக்கிருர்.

திருச்சி, லால்குடித் தொகுதியில் ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றவரும், அண்மையில் நடைபெற்ற மாவட்டக் கழகத் தேர்தலில் கட்சி மாறி காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு அதே லால்குடித் தொகுதியில் தோழர் அன்பில் தர்மலிங்கத்தால் தோற்கடிக்கப்பட்டவருமான ராஜா சிதம்பரமும் சட்ட சபை காங்கிரஸ் கட்சியில் சேருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

தற்போது உழைப்பாளர் கட்சியில் 12 அங்கத்தினரும், காமன்வீல் கட்சியில் 6 அங்கத்தினர்களும் இருக்கிருர்களென்றும் தெரிகிறது

சட்ட சபையில் மொத்த அங்கத்தினர் 229. இப்போது காங்கிரசின் எண்ணிக்கை 136.

பழையகோட்டை பட்டக்காரர் காங்கிரசில் சேர சம்மதித்துள்ளதால், மேல்சபையிலும் 26 ஆகக் காங்கிரசின் எண்ணிக்கை உயருகிறது. மேல் சபையில் மொத்தம் 51 பேர்கள் உண்டு.

# கழகச் செய்திகள்

## பம்பாய் மாவட்ட தி. மு. க. கூட்டம்

21—11—54 மாலை 6½ மணியளவில், பம்பாய், தாராவி குடியரசு நிலையத்தில், தோழர் சு. வள்ளிநாயகம் தலைமையில் நடைபெற்ற பம்பாய் மாவட்ட தி. மு. கழகக் குழுக் கூட்டத்தில், கடிதப் போக்குவரத்துக்களும், 31—10—54 முடிய வரவு-செலவு கணக்கும் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர், புதிய ஆண்டிற்கான கழக நிர்வாகிகள் தேர்தலை 1955-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13-ந் தேதியன்று, தாராவி குடியரசு நிலையத்தில் நடத்துவதெனவும், போட்டியிடுவோர் தங்கள் விண்ணப்பத் தாள்களை 6—2—55க்குள் தேர்தல் அதிகாரிகளிடம் தந்துவிடவேண்டுமெனவும், விண்ணப்பத் தாள்களைத் திரும்பிப் பெற்றுக்கொள்ளும் நாள் 11—2—55 எனவும் முடிவு செய்யப்பட்டதுடன், தேர்தல் அதிகாரிகளாகத் தோழர்கள் எஸ். தியாகராசன், நம்பிநாராயணன், எஸ். தங்கவேலன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கிளைக் கழகங்கள் தங்கள் புத்தாண்டு தேர்தல்களை 1954 டிசம்பர் இறுதிக்குள் நடத்திவிடவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

### பம்பாய்—தாளு தி. மு. கழகம் (கிளை)

20—11—54 மாலை 7 மணியளவில் தோழர் பி. டி. பாண்டியன் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், வரவு-செலவு கணக்கு வாசித்துக் காட்டப்பட்டதுடன், செயலாளர் பி. டி. பாண்டியன் விலகல் கடிதமும் ஒப்புக்கொள்ளப்பட்டது. டிசம்பரில் பொதுக்கூட்டம் ஒன்று நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

★

25—11—54 மாலை 7 மணிக்கு, தோழர் எம். இராசகோபால் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு அவசரக் கூட்டத்தில், தோழர் வைதீகசங்கரன் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், புத்தாண்டுத் தேர்தலை 25-12-54ல் நடத்துவதென்றும், அடுத்த ஆண்டு பிப்ரவரி திங்களில் ஆண்டு விழா நடத்துவதென்றும், பொங்கல் விழாவில் கலந்துகொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

### ஆமதாபாத்—ஜமால்பூர் தி. மு. கழகம்

21—11—54 பிற்பகல் 3 மணியளவுக்கு ஜமால்பூர் 1-வது வட்ட தி மு. கழகச் செயற்குழு கூட்டம் தோழர் பி. தில்லை கோவிந்தன் தலைமையில் நடைபெற்றபோது, இரண்டு மாத வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், அடுத்து வரும் பொங்கல் விழாவை சிறப்பாகக் கொண்டாடும்படி நகர பொதுக் குழுவைக்கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### சென்னை—அயனுவரம் தி. மு. கழகம்

23—11—54 மாலை 8 மணிக்கு கழக இல்லத்தில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் வரவு—செலவு கணக்கு சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டபின், பொங்கல் விழாவினை அவ்வட்டத்திலுள்ள 'பாரதி தாசன் நூல் நிலையம்', 'வள்ளுவர் படிப்பகம்' ஆகியவையுடன் சேர்ந்து இரண்டு நாட்கள் கொண்டாட ஏற்பாடுகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

### திருச்சி—உறந்தை (கிளை) தி. மு. கழகம்

20—11—54 இரவு 8½ மணியளவில், கழகப் பணிமனையில் தோழர் ஜி. பராங்குசம் முன்னிலையில் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்தலில், கீழ்க்கண்ட தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: அ. தங்கவேல்; துணைச் செயலாளர்: தென்னரசன்; பொருளாளர்: டபள்யூ. எல். சேகர்; செயற்குழு உறுப்பினர்கள்:— தோழர்கள் தாமோதரன், கோவிந்தராசன், இராமமூர்த்தி, சுப்பிரமணியன், மாரியப்பன், சின்னையன், கே. பி. சாமி, தர்மலிங்கம், சாரங்கன், அழகிரி, டி. பி. எஸ். மணி, குழந்தைவேலன். நகரப் பிரதிநிதிகள்: தாமோதரன், சுப்பிரமணியன்.

பின்னர் கழகத்தின் ஆக்கவேலைகள் குறித்தும், ஜனநாயக முறைப்படி நடைபெற்ற இத்தேர்தல் குறித்துப் பாராட்டுதல் தெரிவித்தும் தோழர் பராங்குசம் சொற்பொழிவாற்றினுர்.

### உ. தா. வீரசோழபுரம் தி. மு. கழகம்

24—11—54 மாலை 6 மணிக்கு, கேசவ விலாஸ் சிற்றுண்டி விடுதியில் தோழர் கி. அரங்கநாதன் தலைமையில் நடைபெற்றக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கவிமணியின் மறைவுக்கும், புத்தப்பன்ளம் அரங்கநெடுமாறன் அவர்கள் தந்தை மறைவுக்கும் அனுதாபம் தெரிவித்துப் பின்னர், பொங்கல் திருநாளை சிறப்புற கொண்டாடுவதென்று முடிவு செய்யப்பட்டதுடன், வரவு – செலவு கணக்குகளும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

### நீர்முள்ளிக்குட்டை (சேலம் மாவட்ட) தி. மு.க.

25—11—54 இரவு 7 மணிக்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: என். எம். தங்கவேல்; துணைச் செயலாளர்: என். டி. வீரய்யன்; பொருளாளர்: என். எம். முத்து; மாவட்டப் பிரதிநிதி: என். ஏ. அங்கமுத்து. மற்றும் 25 செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### கடம்பத்தூரில் தி. மு. கழகத் துவக்கம்

திருவள்ளூரை அடுத்த கடம்பத்தூரில், 25—11—54 மாலை 6-30-மணி அளவில், தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் செல்வராஜன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் டி. ஆர். வரதன், மு. புரட்சிமணி ஆகியோர் பேசியதும், தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் தி. மு. கழகத்தின் லட்சியமான திராவிட நாடு திராவிடருக்காக வேண்டியதின் அவசியம் குறித்து விளக்கிப் பேசினர்.

இறுதியாக தோழர் கண்ணதாசன் இன்றுள்ள அரசியல் நிலை குறித்து விரிவுரையாற்றினுர். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

### சிருபுழல்பேட்டையில் தி. மு. க. பிரசார கூட்டம்

21—11—54 இரவு 8½ மணியளவில், கும்மிடிபூண்டி தி. மு. கழகச் சார்பில், சிருபுழல்பேட்டை சிற்றூரில் ஊர்ப் பெரியவர் நாகரத்தினம் தலைமையில் நடைபெற்ற கழகப் பிரச்சாரக் கூட்டத்தில், தோழர்கள் ஈ. எஸ். மணி, பு. செ. தூயமணி, இராதாமணாளன், ஆ. கிருஷ்ணன் ஆகியோர் தி. மு. கழகத்தின் சமுதாய, அரசியல், பொருளாதாரக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

# 'கொடுத்த வாக்குறுதிப்படி செயலாற்ற கூட்டுத் தோழர்கள் தவறினர்!

## 'வாக்கைமீறினவர்களுடன் சேவை செய்ய விருப்பமில்லை'

### திருச்சி நகரமன்ற உறுப்பினர் பதவி விலகல்

திருச்சி, டிச. 3—

"நகரசபையில் உள்ள தோழர்கள் தாங்கள் தந்த வாக்குறுதிப்படி நடந்துகொள்ளவில்லை என்பதைக் காண நான் வருந்துகிறேன். எனவே, அந்த நிலையில் என்னுல் இனியும் தொடர்ந்து உறுப்பினராக இருந்து பணியாற்ற முடியாது," என்று, தோழர் டி. எஸ். பகவதி என்ற திருச்சி நகரசபை உறுப்பினர் ஒரு நிருபரிடம் கூறியிருக்கிறார்.

திருச்சி நகர சபைத் தலைவர் தேர்தல் இன்று நடைபெற்றது.

திரு. ஜி. அண்ணமலை முத்துராஜா என்பவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதும், தோழர் டி. எஸ். பகவதி என்பவர் தனது உறுப்பினர் பதவியை ராஜினுமாச் செய்வதாகக் கூறி சபையினரை ஆச்சரியத்தில் ஆழ்த்தினர் எனத்தெரிகிறது.

திருச்சி நகரசபைத் தலைவர் ஏ. ராமசாமி தேவர் மீது சின்னுட்களுக்கு முன் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேறியது நினைவிருக்கலாம். அந்தயொட்டி, காங்கிரசிலிருந்து விலக்கி வைக்கப்பட்ட ஒருவரும் இப்போது புதிய தேர்தலில் போட்டியிட்டு தோல்வி கண்டிருக்கிறார்.

## எல்லைத் தகராறுகள்

"ஆந்திர மாநிலத்தில், மந்திரி சபை இராஜினுமா செய்துவிட்டு, கவர்னரின் நேரடி ஆட்சி நடைபெறுவதால், சென்னை—ஆந்திரா மாநிலங்களுக்கிடையேயுள்ள எல்லைத் தகராறுகளை, இரு சர்க்கார்களுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடத்தி தவிர்ப்பதற்குப் பதிலாக, அத்தகராறைத் தீர்த்து வைக்க எல்லைக் குழு ஒன்றை நியமிக்கலாமென்று இந்திய சர்க்காருக்குத் தெரிவிக்கும் விஷயம் சென்னை சர்க்காரின் ஆலோசனையிலிருந்து வருகிறது," என்று, சென்னை சட்டசபையில் அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

தகராறு சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் மக்கள் தொகை சேகரிப்பதில், மத்திய மாநில சர்க்கார்களின் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனரா என்ற ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில், அமைச்சர், மக்கள தொகை சேகரிக்கும் அவ்வேலை பூர்த்தி அடைந்துவிட்டதெனவும், இறுதியான புள்ளிவிபரங்களை மக்கள் தொகைக் கணக்கெடுப்புக் குழு ஏற்க வேண்டுமெனவும், அக்குழுவின் உத்திரவை சர்க்கார் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் கூறினர்.

"மற்ற அரசியல் கட்சிகளைப் போல், சென்னை சர்க்காருக்கும் தமிழர்களின் உரிமையைப் பாதுகாப்பதில் அதிக அக்கரை உண்டு,"

என்று, நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள், சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

## தீண்டாமை ஒழிப்பு

சர்க்காரால் நடத்தப்படும் மாணவர் விடுதிகளிலும், சர்க்கார் உதவியுடன் நடைபெறும் மாணவர் விடுதிகளிலும் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான தாழ்த்தப்பட்ட மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென மைசூர் மாநில சர்க்கார் உத்திரவிட்டுள்ளதாக, மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா தெரிவித்திருக்கிறார்.

'மாநிலத்தில், தீண்டாமை ஒழிப்பைத் தீவிரமாக்குவதற்காகவே இம்முயற்சியை சர்க்கார் மேற்கொண்டுள்ளது' என்று அவர் கூறியிருக்கிறார்.

## கைவிட்டனராம்!

சென்னை நகரில், மீண்டும் டிராம் வண்டிப் போக்குவரத்தை சர்க்கார் ஏற்று நடத்தும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டது என்று சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், போக்குவரத்து அமைச்சர் பரமேஸ்வரன் தெரிவித்திருக்கிறார்.

## வெளியேறினர்!

புதுடில்லி, டிச. 3—

மணிப்பூருக்குப் பொறுப்பாட்சி வழங்கப்பட வேண்டுமென்று கோரி, பி. சோ. கட்சி 'சத்தியாக்கிரகம்' நடத்தி வருவதைப்பற்றி, மக்கள் சபையில் கொண்டுவரப்பட இருந்த ஒரு அவசரத் தீர்மானத்தை அனுமதிக்க மறுத்து சபாநாயகர் தெரிவித்த சில கருத்துக்களை ஆட்சேபிக்கும் வகையில் பி.-சோ. கட்சி உறுப்பினர்களும், கம்யூனிஸ்டுக் கட்சியினரும், மற்றும் சில எதிர்க்கட்சி உறுப்பினர் சபையைவிட்டு வெளியேறினர்.

இந்த அவசரத் தீர்மானத்தை அனுமதிக்க மறுத்துப் பேசுகையில், சபாநாயார், 'இவ்விஷயத்தில் சர்க்கார் சமர்ப்பிக்கும் தகவல்களுக்கே நான் அதிகமான மதிப்புத் தருகிறேன்; சபை உறுப்பினர்கள், தாங்கள் கேள்விப்படுகிற தகவல்களைப் பிரச்சாரம் செய்வதற்குச் சபையை உபயோகித்துக் கொள்ளக் கூடாது," என்று கூறியிருக்கிறார்.

## மதுரை சம்பவம்....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அமைதியாகவே நடைபெற்றிருக்கிறது; அப்படி இருக்க, மதுரையில் குழப்பம் நேர்ந்ததற்குக் காரணம், அங்குள்ள வகுப்புவாதிகள் தான்; காந்தியாரைக் கொன்று குவித்த இந்துமகா சபை இன்னும் ராஷ்ட்ரீய சுய சேவா சங்கம் போன்ற வகுப்புவாதி நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள்தான் குழப்பத்திற்கு காரணம். 51 போலீசார், ஒரு சப்-மாஜிஸ்திரேட், ஆகியோருக்கு காயம்படுகிற அளவுக்குக் கல்லெறிந்து குழப்பம் விளைவித்திருக்கின்றனர் என்ருல், அந்த வகுப்புவாதிகள் எவ்வளவு கட்டுக்கடங்காதவர்களா யிருக்க வேண்டும் என்பதை யூகிக்க முடியவில்லையா என்ன?" என்று இடித்துரைத்திருக்கிறார்.

போலீசார் நேற்று நடைபெற்ற சம்பவங்களை யொட்டி, சட்ட விரோதமாகக் கூடி, பயங்கர ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்திக் குழப்பம் விளைவித்ததாக சுமார் 31 பேர்கள்மீது வழக்குப் பதிவு செய்து அவர்களைக் கைது செய்து வருகின்றனர். இருவர் கைதாகி விட்டனர்.

கைது செய்யப்பட வேண்டியுள்ள 29 பேர்களில் விபூதி வீரமுத்து 'சுவாமி'கள், மதுரை வழக்கறிஞரும் வைத்தியநாத அய்யரின் மகனுமான சங்கரனும் உள்ளனர் எனத் தெரிகிறது.

---

கடந்த இரண்டாவது உலக யுத்தத்தின்போது சோவியத் ரஷ்யா, ஈரானை ஆக்கிரமித்த காலத்திலிருந்து அதற்குக் கொடுக்க வேண்டிய 11 டன் தங்கத்தையும், 80 இலட்சம் அமெரிக்க டாலர்களையும் திருப்பிக் கொடுத்துவிடுமாம்!

---

**5-வது வட்ட தி.மு.க. (கிளை) ஆதரவில் அழகிரி நூலக நிதி கூட்டம்**

**சென்னை கோகலேமண்டபத்தில்**

**5—12—54 காலை 9 மணிக்கு**

தலைவர்: டி. என். இராவணன்

பேசுவோர்:

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

கே. ஆர். இராமசாமி

ஏ. கே. வேலன்

—நன்கொடை அணு 8, 4

### ஆதிதிராவிட மக்களும்—எதிர்காலமும்

6-12-54 மாலை 5-30 மணிக்கு, சென்னை, இராயபுரம், மீனுட்சியம்மன்பேட்டை, எண் 1, ராமநாய்க்கன் தெருவிலுள்ள வடசென்னை ஆதி திராவிட மகாஜன சபையில், கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த தோழர் வி. பி. முருகையா தலைமையில் தோழர்கள் கே. ராமலிங்கம், ஈ. வி. ராஜன், பவழம் ஜி. ஜெயராமன் ஆகியோர் 'ஆதி திராவிட மக்களும்-எதிர்காலமும்' என்னும் பொருள் பற்றிப் பேசுவர்.

### குறள் வகுப்பு

5-12-54 மாலை 2 மணிக்கு, சென்னை, இராயபுரம், ஆதம் சாயபு தெரு, கமலவினாயகர் பள்ளியில் தோழர் கி. தியாகராசன் அவர்களால் குறள் வகுப்பு நடத்தப்படும்.

### 'நல்ல தீர்ப்பு'—நாடகம்

5-12-54 இரவு 10 மணிக்கு, பொன்னாச்சி ராஜா தியேட்டரில், தி. மு. கழக ஒலிபெருக்கி நிதிக்காக 'நல்ல தீர்ப்பு' எனும் நாடகம், தோழர் கே. ஏ. மதியழகன் தலைமையில் நடைபெறும்.

### கட்டிடத் திறப்பு விழா

6-12-54 காலை 7 மணியளவில், அரசர்குளம் பஞ்சாயத்து போர்டு கட்டிடத் திறப்பு விழா தோழர் ஏ. முத்துக்கருப்பத் தேவர் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

### சொற் பயிற்சிக் கூட்டம்

5-12-54 காலை 9 மணிக்கு, சென்னை 44-வது வட்ட தி. மு. கழக பணிமனையில் தோழர் பி. வி. ஆனந்தன் தலைமையில் 'நாடும்-நாமும்' என்னும் பொருள் பற்றி நடைபெறும் சொற்பயிற்சிக் கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

5-12-54 மாலை 6 மணிக்கு, சென்னை 35-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தில் (63-பி, ஆற்காட்டுச் சாலை, கோடம்பாக்கம்) தோழர் க. இளங்கோ தலைமையில் 'விடுதலை வேட்கை' என்னும் பொருள் பற்றி நடைபெறும் சொற்பயிற்சிக் கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசுவர்.

## வேலை நிறுத்தம் தீவிரமாகும்

### நிர்வாகக் குழு முடிவு காற்றில் பறக்கும்

கடந்த ஒரு வார காலமாக கல்கத்தாவில் துறைமுகத் தொழிலாளர் நடத்திவரும் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுவிடுவதென, யூனியன் நிர்வாகக் குழு ஒரு முடிவு செய்திருந்தது. இம்முடிவை, தொழிலாளர்களின் மகாசபைக் கூட்டம் நிராகரித்துவிட்டதோடு, வேலை நிறுத்தத்தை இன்னும் தீவிரமாகவும், பரவலாகவும் நடத்துவதெனத் தீர்மானித்துள்ளதாம்.

### பாத்திரத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

கல்கத்தா, டிச. 2—

ராணிகஞ்ச் பகுதியிலுள்ள பாத்திரத் தொழில் கம்பெனியைச் சேர்ந்த தொழிலாளர்கள், ஏப்ரல் மாதம் 23-ந் தேதியிலிருந்து சம்பள உயர்வு, கூலி நிர்ணயம், மற்றும் இதர வசதிகள் கோரி வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

இத்தொழிலாளர்களின் பிரதிநிதிகள் 100 பேர் நவம்பர் 22-ந் தேதியிலிருந்து கால் நடையாக நடந்து கல்கத்தா வந்துவிட்டனர்.

பேலூரிலிருந்து கல்கத்தா வரை 135 மைல் தூரம் இவர்கள் நடந்து வந்திருக்கின்றனர்.

கம்பெனியின் தலைமை அலுவலகத்திற்கு முன்னர் இவர்கள் உட்கார்ந்துகொண்டனர்.

கம்பெனியின் டைரக்டர், தொழிலாளர் பிரதிநிதியைச் சந்தித்துப் பேசுகையில், தொழிலாளர்களின் கோரிக்கைகள் தொழில் டிரிபியூனலுக்கு விடப்பட்டிருக்கிறதென்றும், ஆகவே, தொழிலாளர்களின் கோரிக்கைகளை தொழில் அமைச்சரிடம் கொடுக்குமாறும் கூறினர் என்றும் தெரிகிறது.

135 மைல் நடந்துவந்த தொழிலாளர் பிரதிநிதிகளை மேற்கு வங்கத் தொழிலாளர் கழகங்களும், சட்டசபை உறுப்பினர்களும் ஹௌராவில் வரவேற்றனர்.

## பாங்கி ஊழியர் பிரச்சினை

### சமரசம் ஏற்படும்?

பாங்கித் தொழிலாளர்கள் முடிவு செய்திருந்த வேலை நிறுத்தத்தைத் தவிர்ப்பதற்காக, பாங்கிகளுக்கும்—பாங்கி ஊழியர்களுக்குமிடையேயுள்ள தகராறுகளில் சமரசம் ஏற்படுத்தத் தொழிலாளர்களின் தலைவர்கள் சிலர் எடுத்துக்கொண்டுள்ள 'விடா முயற்சி'யின் பயனுக, அனேகமாக, இரு சாராருக்குமிடையில் சமரசம் ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கை வலுத்துக்கொண்டு வருகிறது.

ராஜாத்தியட்சா குழு சமர்ப்பித்த அறிக்கையின் முடிவு தெரியும் வரையில், பாங்கித் தொழிலாளரின் இப்போதைய சம்பளம், படி சம்மந்தமாக மட்டுமின்றி, பிராவிடெண்டு நிதி, போனஸ், அதிகப்படி வேலை நேர அலவன்ஸ், 'கிராஜுடி' ஆகியவை சம்பந்தமாகவும், இப்போதிருக்கும் நிலையே எவ்வித மாறுதலும் இல்லாமலும் நீடித்து இருந்து வர வேண்டுமென்கிற யோசனைக்கு பல்வேறு வட்டாரங்களிலிருந்தும் போதிய ஆதரவு கிடைப்பதால், அது, சமரசத்துக்கு எல்லாரும் சம்மதித்த அடிப்படையாக இருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

### உ. பி. முதன் மந்திரி சம்பூர்ணனந்த்?

லட்சுமணபுரி, டிச. 2—

உத்திர பிரதேச முதன் மந்திரியான பண்டித வல்லப பந்த், மத்திய அரசாங்க மந்திரியாக நியமிக்கப்பட்டிருப்பதையொட்டி, அவரது பதவிக்கு சம்பூர்ணனந்த் தேர்ந்தெடுக்கப்படுவார் எனவும், சட்டசபை காங்கிரஸ் கட்சி, இந்த முடிவுக்கு ஒப்பம் தந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

### இந்திய உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி நியமனம்

புதுடில்லி, டிச. 2—

இந்திய தலைமை உயர்நீதி மன்ற பிரதம நீதிபதியாகவுள்ள திரு. மேஹர்சந்த் மகாஜன் டிசம்பர் 23 முதல் ஒய்வு பெறுவதை ஒட்டி அவரது இடத்தில், புதிய பிரதம நீதிபதியாக பிஜன் குமார் முகர்ஜியை நியமித்ததை ஜனுதிபதி அங்கீகாரம் செய்துள்ளார் எனத் தெரிகிறது.

## பக்தி நெறி.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

'ஆண்டவர்கள்' இந்த உலகத்தைப் பற்றி கொண்டிருந்த கருத்துக்களை விளக்கி, அவை எப்படி இன்றைய விஞ்ஞான அறிவால் பொய்யென நிரூபிக்கப்பட்டிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டினர்.

மேலும், பல மதத்தலைவரும் படைத்த ஆண்டவர்களுக்கு அவரவர்கள் விருப்பத்திற்கொப்ப உருவங்களையும், இலக்கணங்களையும் கற்பித்து வைத்திருக்கிறார்கள் என்ற புரட்டையும் அம்பலப்படுத்தி, அந்த ஆண்டவனை அடையும் நெறி எனக் கூறப்படும் 'பக்தி நெறி,' மக்களை வாழ்விக்கச் செய்யாது—மாறுக, மக்களின் வாழ்வைப் பாழ்படுத்துகிறது—மக்களின் நேரம், நினைப்பு, உழைப்பு, செல்வம், அறிவு அத்தனையையும் பாழாக்குகிறது—என்று இடித்துக்காட்டியதுடன், இன்று உலகில், மக்களின் வாழ்வில் இன்பத்தை அதிகரிக்கவும், துன்பத்தைக் குறைக்கவும் வழியென்ன—குறைந்த உழைப்பில் வாழ்வின் இன்பத்தை எப்படிப் பெருக்கிக் கொள்வது—என்ற ஆராய்ச்சியில் பகுத்தறிவு நெறி ஈடுபட்டிருப்பதால், மக்களுக்கு வாழ்வைத் தரும் நெறி—ஆகிவரும் நெறி, 'பகுத்தறிவு நெறி தான்' என்பதை நிலைநிறுத்தி சீரியதோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

## டாக்டர் அம்பேத்கார் புத்தர் மாநாட்டுக்கு!

ரங்கூனில் நடைபெறும் புத்த மாநாட்டுக்கு, டாக்டர் அம்பேத்கார் சென்றிருக்கிறார்.

பெரியார் இந்த மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

டாக்டர் அம்பேத்காருடன், அவர் துணைவியாரும் சென்றிருக்கிறார்.

டாக்டர் அம்பேத்காரின் துணைவியார் ஒரு பார்ப்பன அம்மையார் என்பது நேயர்களுக்குத் தெரிந்ததே.

## கவர்னர் - காமராசர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாங்கிப் பேசுகையில், குறிப்பிட்டதாக பத்திரிகைகளில் வெளி வந்த செய்தி கீழே தரப்படுகிறது:—

"இந்த ஒற்றைவாடை தியேட்டரில் சில நாட்களுக்கு முன் மக்கள் மனதைப் புண்படுத்தக் கூடிய, கீழ்த்தரமான எண்ணங்களைப் பரப்பும் நாடகம் நடந்திருக்கின்றது. முன்பெல்லாம் மக்கள் இந்த கொட்டகைப் பக்கமே வரக்கூசுவார்கள்; அந்த அளவு அவர்கள் மனம் புண்பட்டது."

[இங்குதான் தோழர் எம். ஆர். இராதா அவர்களின் 'இராமாயண' நாடகம் நடைபெற்றது.]

## ஒரே மொழி.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யோசனைப்படி மாநிலங்களை அமைப்பதற்கு, உருவாக்குவதற்கு சாதகமானதாயிருக்க வேண்டும். இதன்படி பார்த்தால், இந்த ஆய்வுக் குழுவின் அறிக்கை உபயோகமற்றதாகும்."

அவர் மேலும் கூறினர்:—

"ஆய்வுக் குழு, பிரச்சினை சம்மந்தப்பட்ட சரியான விவரங்களைப் பூராவாகச் சேகரிக்க முடியவில்லை.

குழுவினர், அரசாங்க இலாகாக்கள் பல தந்த புள்ளிவிபரங்களைக் கொண்டு அறிக்கையைத் தயாரித்திருக்கின்றனர். அந்தப் புள்ளி விபரங்கள், ஒரு சரியான முடிவை எடுப்பதற்கு உபயோகிக்கத் தகுந்தவையல்ல.

மேலும், மைசூருக்கு வெளியில் உள்ள கர்நாடகப் பகுதிகளின் இயற்கை வளங்களைப் பற்றிய விபரங்களைச் சேகரிக்க குழுவிற்கு இயலவில்லை. அப்படி அவர்கள் விபரங்களைச் சேகரித்திருந்தால் கர்நாடக மாநிலத்திற்குக் கிடைக்கக்கூடிய பல இயற்கை வளங்களை கண்டிருக்க முடியும்.

ஒரு கர்நாடக மாநிலம் காணுவதற்கு இங்குமங்குமாகக் காணப்படுகிற சிலபல நிதி சம்பந்தமான குறைகளைக் காரணமாகக் காட்டக் கூடாது.

ஆய்வுக் குழுவினர் கர்நாடக மாநிலம் காண்பதால் ரூ. 108 - லட்சம் வரவு - செலவில் துண்டு விழக்கூடும் எனக் கூறியிருப்பதை எடுத்துக் காட்டி, அத்தகைய பற்ருக்குறை ஒரு மாநிலத்தில் ஏற்படக் கூடியதே; அதுபற்றி நாம் கவலைப்படத் தேவை இல்லை; மத்திய அரசாங்கம் உதவி புரிய (?) இருக்கவே இருக்கிறது," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

---

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 1954 மார்ச் 31-ந் தேதி வரை மத்திய சர்க்கார் செலவழித்துள்ள மொத்தம் 335 கோடி ரூபாயில் சுமார் 15 சதவிகிதம் (131.3கோடி ரூபாய்) வெளிநாடுகளிலிருந்து கிடைத்த நிதி உதவியாகும்.

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணுதுரை, எம் ஏ.